|பதிவஞ்சல்|

# தஞ்சாவூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

## ரூ.மு.எண்.5560/அ1/2023, நாள்.08.10.2024.

***********

பொருள்: பள்ளிக் கல்வி – கருணை அடிப்படை நியமனம் – அமைச்சுப் பணி – தஞ்சாவூர் மாவட்டம், கட்டாநகரம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து 13.01.2015 இல் பணியிடை இறந்த திருமதி.கோ.இராஜகுமாரி என்பாரின் வாரிசுதாரர் திருமதி.க.பூஜா என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவாய்ப்பு வழங்கியமை – பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1.அரசாணை நிலை எண் : 101., பள்ளிக் கல்வி (பட்ஜெட் II)த் துறை நாள் : 18.05.2018.

2. அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை(க்யு1), நாள். 26.02.2021.

3. அரசாணை நிலை எண் : 151., பள்ளிக் கல்வி (பக1(1) த் துறை நாள் : 09.09.2022

4.தஞ்சாவூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.4145/அ1/2021, நாள்.12.10.2022.

5.அரசு கடித எண். (e file) எண்.4419 /தொ.க1(1)/ 2024–1, நாள்.17.05.2024.

6.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண் :26062/ஜே/இ2/2023 நாள் :22.05.2024.

7.தமிழ்நாடு பள்ளி கல்வி இணை இயக்குநரின்(பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.05174/ஜே/இ1/2023 நாள்.15.07.2024..

***********

தஞ்சாவூர் மாவட்டம், கட்டாநகரம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து 13.01.2015 இல் பணியிடை இறந்த திருமதி.கோ.இராஜகுமாரி என்பாரின் வாரிசுதாரர் திருமதி.க.பூஜா என்பாருக்கு பார்வை (4) இல் காணும் செயல்முறைகளின்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 14.10.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (2) இல் காணும் அரசாணை பத்தி 5.1 , 5.2 மற்றும் 5.3 இல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1 இல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறைசெய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(5.3) கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்த விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் பணியாளர்களை பொறுத்தவரையில், அவர்களை தற்காலிக அரசு பணியாளர்களாக கருதி நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அவர்களுக்கு இரண்டாம் மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை (2) மற்றும் (5) இல் காணும் அரசாணை மற்றும் அரசுக் கடிதத்தின்படி, திருமதி.க.பூஜா, என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டவருக்கு கீழ்க்காணும் விவரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 01 | திருமதி. க.பூஜா,<br>இளநிலை உதவியாளர்,<br>வை.கோ.நி,.அரசுமேல்நிலைப்பள்ளி,<br>தாராசுரம் | 14.10.2022<br>முற்பகல் | 14.10.2022<br>முற்பகல். |

இணைப்பு:அசல் ஆவணங்கள் மற்றும் அசல் பணிப்பதிவேடு.

1) 10-ம் வகுப்பு மதிப்பெண் சான்று அசல் - 1
2) 10-ம் வகுப்பு உண்மைத் தன்மை சான்று அசல் - 1

முதன்மைக் கல்வி அலுவலர்,
தஞ்சாவூர்.

பெறுநர்:

திருமதி. க.பூஜா,
இளநிலை உதவியாளர்,
வை.கோ.நி,.அரசுமேல்நிலைப்பள்ளி,
தாராசுரம்
தஞ்சாவூர் மாவட்டம் (உரிய வழியாக)

நகல்: 1.தலைமை ஆசிரியர், வை.கோ.நி. அரசு மேல்நிலைப் பள்ளி, தாராசுரம்.
2.தமிழ்நாடு, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.